# 20 ஈழத்துச் சைவ மரபுகளைப் பேணுவோம்

ஈழ நாட்டினை சிவபூமி எனத் திருமூலர் போற்றுவார். பண்டு தொட்டுச் சைவம் ஈழநாட்டில் போற்றப்பட்டு வந்ததால் திருமூலர் ஈழநாட்டினை சிவபூமி என்றார் போலும். ஈழநாடு தமிழகத்தின் ஒரு பகுதியாகவும், தமிழகத்தில் ஏற்படும் அரசியல் மாற்றங்களும், குடிப்பெயர்வும், இரு நாடுகளுக்குக்கான உறவுகளும் வர்த்தகமும் ஈழநாட்டில் தமிழ் மக்கள் குடியமர்வதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன எனலாம். பண்டு தொட்டு இன்று வரை ஈழநாட்டில் சைவ மரபுகள் பேணப்படுவதற்கு பழைய மரபுக்கதைகள், பழந்தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், கட்டட வழிபாட்டுச் சிற்பங்கள், தொல்பொருள் சின்னங்கள், சிற்பம், ஓவியம் போன்றவை சான்றுகளாக அமைகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஈழநாட்டின் சைவமரபுகள் பேணப்பட்டு வருமாற்றை பின்வரும் கால கட்டமாக வகுத்து நோக்கலாம்.

i. புராதன காலம்
ii. அனுராதபுர காலம் கி.மு 145 - கி. மு 101
iii. பொலனறுவைக் காலம் (கி.பி 10 - 13 ஆம் நூற்றாண்டு)
iv. பொலனறுவை அரசிற்கு பிற்பட்ட போர்த்துகேயர் வருகைக்கு முற்பட்ட காலம்
   (அ) தென்னிலங்கை இராசதானிகள் காலம்
   (ஆ) யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்
   (இ) வன்னிச் சிற்றரசர் காலம்
   (ஈ) கிழக்கிலங்கை சிற்றரசர் காலம்
v. ஐரோப்பியர் காலம்
   (அ) போர்த்துகேயர் காலம் (1505 - 1658)
   (ஆ) ஒல்லாந்தர் காலம் (1658 - 1796)
   (இ) ஆங்கிலேயர் காலமும் (1796 - 1948), 19 ஆம் நூற்றாண்டும்
vi. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலம் என்பன அக்காலங்களாகும்.

புரதான காலத்தில் இயக்கர், நாகர் வாழ்ந்தனர். அவர்கள் சிவ வழிபாட்டைக் கடைப்பிடித்தனர் என்பதை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. அக்காலத்திற்குப் பின் அனுராதபுரக் காலம் இடம் பெறுகின்றது. இக்காலம் பண்டுகாபயன் தொடக்கம் ஐந்தாம் மகிந்தனின் ஆட்சியில் சைவமும் அரசியலும் மேலோங்கியது. அத்துடன் பிராமணச் செல்வாக்கு, பத்தினி வழிபாடு, பௌத்தர்கள் சைவர்களாக மாறல், குளக்கோட்டன் என்ற சோழ இளவரசன் சிவதலங்களான திருக்கேதீச்சரம் போன்றவற்றை புனரமைப்புச் செய்தல், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் போன்றோர் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் மீது தேவாரங்கள் பாடல், சிவலிங்கம்,


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

துர்க்கை, விஸ்ணு, சூரியன் என்பன பௌத்த விகாரைகளில் செதுக்கப்படல், சந்திரசேகரர் பார்வதி, வீரபத்திரர், பூவாள நாயகி, உமா சமேத நடராசர், பார்வதி, வீரபத்திரர், நாகதம்பிரான், யோக தட்சணாமூர்த்தி போன்ற செப்புத் திருமேனிகள் காணப்படல், பல்லவ பாணியில் இக்காலக் கட்டடங்கள் கட்டப்படல், இசுறுமுனிய காதலர் சிற்பம் இருத்தல், குதிரை வீரன் சிற்பம் காணப்படல் இக்காரணங்களின் மூலமும் சைவமும் அதனோடிணைந்த பண்பாட்டம்சங்களும் இருந்தன என்பதை அறிய முடியும்.

கி.பி பத்தாம் நூற்றாண்டின் சோழராட்சியின் போது இச் சைவமானது ஈழத்தில் மேலும் நிலைநாட்டப்பட்டது. முதலாம் இராசராசனும், அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழனும் தம் ஆட்சிக் காலங்களில் சிறந்த அரசியல் முறையை நிலைநாட்டினர். பொலநறுவை, கந்தளாய், பதவியா போன்ற இடங்களில் பல கோயில்களைக் கட்டினர். அவற்றுள் வானவன் மாதேவி ஈச்சரம் இரவிகுல மாணிக்கேஸ்வரம், உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஸ்வரம் என்பன குறிப்பிடத்தக்கன. அத்துடன் பிராமணக் குடியிருப்புக்கள் என்பனவும் ஏற்படுத்தப்பட்டன. வைஜந்திசூத்திரம் என்ற நூல் இக்காலத்ததாகும். நடேசர், பார்வதி, விநாயகர், முருகன், வைரவர், சோமஸ்கந்தர், மகாவிஷ்ணு, சண்டேஸ்வரர், காரைக்காலம்மையார் மற்றும் நான்கு நாயன்மார்களின் திருமேனிகள் என்பன இக்கால ஆலயங்களில் வைத்து வழிபடப்பட்டன. சோழர் காலத்தில் இவ்வாறான காரணங்களால் சைவமும் சைவப் பண்பாட்டம்சங்களும் பெரு வளர்ச்சியடைந்தன.


பொலனறுவை வானவன் மாதேவி ஈச்சரம்

சோழராட்சியைத் தொடர்ந்து போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலத்திற்குள் (கி.பி 1250 - கி.பி 1505) பல சிற்றரசுகள் உருவாகின்றன. இக்காலத்திற்குள் சைவம் காணப்பட்டது. இச்சிற்றரசுக் காலங்களில் திராவிட பாணியில் பல கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்கள் இன்றும் காணப்படுகின்றன. இச்சிற்றரசு காலங்களுக்குப் பின் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் (கி.பி 13 ஆம் நூற்றாண்டு - 17 ஆம் நூற்றாண்டு முற்பகுதி) முருகன் ஆலயங்கள், விநாயர் ஆலயங்கள், அம்மன் ஆலயங்கள் கட்டப்பட்டன. சைவ இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன. சோதிட வைத்திய நூல்கள் பலவும் தோன்றின. இவற்றால் இக்காலத்தில் சைவமும் சைவப்பண்பாட்டம்சங்களும் இருந்தன என்பதை அறிய முடியும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

வன்னிச் சிற்றரசர்கள் காலத்திலும், கிழக்கிலங்கைச் சிற்றரசர்கள் காலத்திலும் சிவாலயங்கள், பிள்ளையார் ஆலயங்கள், கண்ணகி ஆலயங்கள், ஐயனார் ஆலயங்கள் காணப்பட்டன. இதனால் சைவம் இருக்கை உணர முடியும். இவர்களுக்குப் பின் கண்டி இராச்சியத்தின் நாயக்கமன்னர் ஆட்சிக் காலத்திலும் சிவாலயங்கள், விநாயகர் ஆலயங்கள் காணப்பட்டன. இக்காலத்தில் தான் சைவ பௌத்த உறவுகள் வலுப்பெற்றன. சைவாலயங்கள் பல பௌத்த மன்னர்களால் புனரமைக்கப்பட்டன. பத்தினி (கண்ணகி) அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய எசல பெரகரா காணப்பட்டது. விஷ்ணு, விநாயகர், முருகன் போன்றவற்றை பௌத்தர்கள் வழிபட்டனர். பௌத்த கட்டடங்கள் யாவும் திராவிட பாணியில் கட்டப்பட்டது. கடலாதெனிய, லங்காதிலக விகாரைகள் சிற்பசாஸ்திர விதிப்படி கட்டப்பட்டன. கலப்புத் திருமணங்கள் நிகழ்ந்தன. சரசோதிமாலை போன்ற சைவச் சோதிட நூல்கள் பௌத்தத்தில் இடம் பெற்றன. இவ்வாறு இக்காலத்தில் சைவ பௌத்த உறவுகள் இணைந்திருந்த நிலையில் ஐரோப்பிய இனத்தவர்கள் ஈழத்திற்கு வருகை தந்தனர். போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலத்தில் சைவம் நலிவுற்றிருந்தாலும் இக்காலத்தில் சைவ இலக்கியங்கள் பல தோற்றம் பெற்று சைவத்தைப் பாதுகாத்தன. ஆங்கிலேயர் காலத்தில் நாவலர் முன்வந்து மீண்டும் சைவத்தை பல துறைகளினூடாக நிலை நாட்டுகின்றனர். இதனால் இவர் ஐந்தாம் சமயகுரவர் எனப் போற்றப்பட்டார். இவருடைய காலத்தில் சைவமும் சைவப் பண்பாட்டம்சங்களும் எழுச்சிப் பெற்றன.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் இற்றை வரை சைவமும் சைவப் பண்பாட்டம்சங்களும் மேலும் வளர்ச்சி பெற்றன. இவற்றில் சைவப் பெரியார்களின் பணிகளும், சமய நிறுவனங்களின் பணிகளும் குறிப்பிடத்தக்கன. இவற்றுடன் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சைவ சமயக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றன. இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் உருவாக்கப்பட்டு அதனூடாக சைவமும் சைவப் பண்பாட்டம்சங்களும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

## பாடச் சுருக்கம்

- எமது சைவ சமய மரபுகள் தொன்மையானவை.
- இச்சைவ சமய மரபுகள் காலத்துக்குக் காலம் வளர்க்கப்பட்டவை.
- ஆலயங்கள், இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், கட்டடங்கள், நாணயங்கள் மூலம் இச்சைவ சமய மரபுகள் வளர்க்கப்பட்டன.
- பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டின் பின் சைவம் மேலும் வளர்ச்சி பெற்றது.
- இன்று சைவம் ஆலயங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சைவ நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எமது சமய மரபுகளை பேணிப்பாதுகாத்த ஆரம்ப காலத்தவர்கள் யாவர்?
2. பொலநறுவைக் காலத்தில் சைவ மரபுகள் வளர்ச்சி பெற்றமைக்கு ஆதாரங்கள் இரண்டு தருக.
3. வன்னிச் சிற்றரசர்கள் காலத்திலும் கிழக்கிலங்கைச் சிற்றரசர்கள் காலத்திலும் சைவம் காணப்பட்டமைகான காரணங்களைத் தருக.
4. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சைவத்தை மீண்டும் பாதுகாத்த பெருமைக்குரியவர் யார்?
5. இருபதாம் நூற்றாண்டில் சைவத்தை பாதுகாத்து வரும் கல்விக் கூடங்கள் இரண்டு தருக.

## ௐ ஆ. செயற்பாடு

- ‘‘சைவ சமய மரபுகள்’’ என்ற தலைப்பில் ஐந்து நிமிடமளவில் வகுப்பறையில் பேச்சொன்று நிகழ்த்துக.
- சைவ சமய மரபுகள் வளர்ச்சி பெற்றமைக்கான காரணங்களை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக